(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 7.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2020 சனவரி 23, வியாழக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ மஹிந்த அமரவீர,** போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ எஸ். எம். சந்திரசேன,** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** மின்சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** காணி மற்றும் காணி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க,** புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** ஏற்றுமதிக் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,** வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அசோக் அபேசிங்க**

**கௌரவ ஜோன் அமரதுங்க**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ வசந்த அலுவிஹாரே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அகில விராஜ் காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ மொஹான் லால் கிரேரு**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கருணாரத்ன பரணவிதான**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா**

**கௌரவ அஜித் பி. பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ ஏ. டி. பிரேமதாச**

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ பாலித ரங்கே பண்டார**

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ அர்ஜுன ரணதுங்க

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ சாகல ரத்நாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ மலிக் சமரவிக்ரம

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ ரவீந்திர சமரவீர

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ வசந்த சேணாநாயக்க

கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சனாதிபதியின் செய்திகள்* :** சனாதிபதியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்வரும் செய்தி பிரதிச் சபாநாயகரால் வாசிக்கப்பட்டது:—

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2020 சனவரி மாதம் ௨௦ ஆந் திகதி

**மாண்புமிகு கரு ஜயசூரிய அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்படுகின்றது.

அதற்கமைய மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) அம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - விசுவாசமுள்ள

**கோட்டாபய ராஜபக்ஷ**

ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01

දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873

ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657

ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல் :** (1) வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான சனாதிபதி நிதியம் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க சார்பாக குழு உறுப்பினர் கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன, அக்குழுவினால் தொகுக்கப்பட்ட, "கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை சுற்றுநிருபம்" பற்றிய அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1) :** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொட்டுஅத்தாவல சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்ரவரி 23 ஆம் திகதிய 2007/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

"கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்குவாராக" என சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 1.44 மணிக்கு கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்கினார்.)

"கௌரவ தேனுக விதானகமகே தலைமை தாங்குவாராக" என சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 2.24 மணிக்கு கௌரவ தேனுக விதானகமகே தலைமை தாங்கினார்.)

"கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்குவாராக" என சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.38 மணிக்கு கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்கினார்.)

“கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்குவாராக” என சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 4.40 மணிக்கு கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 2) :** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் காயன்கேணி கடலோர சரணாலயம் தொடர்பில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2118/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 3) :** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூன் 22 ஆம் திகதிய 1920/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒத்திவைப்பு (தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக” என சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 6.30 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 7.28 மணிக்கு, 2020 சனவரி 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.30 வரை ஒத்திவைக்கப்பட்டது.